# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும்: ஓர் ஒப்பியலாய்வு

அருந்தவராஜா க.[72]

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையில் நடைபெற்று வருகின்ற இனப்பிரச்சினையில் அல்லது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஈடுபாடு காட்டிய தமிழக முதல்வர்களில் எம்.ஜி.ஆருக்கும் அவரைத் தொடர்ந்து சிலகால இடைவெளியில் அப்பதவியினை அலங்கரித்த ஜெயலலிதாவிற்கும் தனியிடமுண்டு. இவர்கள் இருவருமே அ.தி.மு.க என்ற கட்சியினைச் சேர்ந்தவர்கள். முன்னர் பின்னவருக்கு அரசியல் குருவாகவும் இருந்தவர். பின்னவர் முன்னவரை தன்னை அவரது அரசியல் வாரிசாகவும் கூறிக்கொண்டவர். இருப்பினும் இலங்கையினது இனப்பிரச்சினை தொடர்பாக இவர்கள் இருவரும் பின்பற்றிய கொள்கைகளுக்குமிடையிலே வேறுபாடுகள் காணப்பட்டன. எம்.ஜி.ஆரினைப் பொறுத்து அவர் இலங்கையில் இடம்பெற்று வந்த இனப்பிரச்சினை தொடர்பாக நிலையான கொள்கையினை இறக்கும்வரை பின்பற்றி வந்தவர். அதாவது, இலங்கைத் தமிழர்கள் பற்றியும் இலங்கையில் நடைபெற்று வந்த போராட்டத்திற்கு ஆதரவான கொள்கையினையும் உடையவராகவே இருந்து வந்தவர். ஆனால், ஜெயலலிதாவோ இவ்விடயமாக இரு வகையான கொள்கையினைக் கடைப்பிடிப்பவராகக் காணப்பட்டார். அவ்வகையில், 2009இற்கு முன்னதாக அதாவது, சிவில் யுத்தகாலத்திற்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கையின் இனப்பிரச்சினை பொறுத்தும் இங்கு வாழ்ந்த தமிழர்கள் பொறுத்தும் அவர் அக்கறை கொள்ளாத ஒருவராகவே இருந்துள்ளார். அதேநேரத்தில் சிவில் யுத்தம் முடிவடைந்தமையின் பின்னராக இலங்கைத் தமிழர்கள்மீது அனுதாபம் கொண்டவராகவும் தனிநாட்டுக் கோரிக்கையினை ஆதரிப்பவராகவும் தனது கொள்கையினை அப்படியே மாற்றியிருந்தார். இவ்வாய்வானது வரலாற்றுத்துறை சார்ந்து காணப்படுவதுடன் பரந்துபட்டதாகவும் உள்ளது. மேலும் விவரண மற்றும் ஒப்பியலின் அடிப்படையில் அமைந்த ஆய்வாக அமைக்கப்பட்டுள்ள இவ்வாய்விற்குத் தேவைப்பட்ட தரவுகள் பெருமளவிற்குப் பண்பு ரீதியானவையாக உள்ளன. நேர்காணல்கள், அவதானிப்புக்கள், கலந்துரையாடல் போன்ற முதல்நிலைத் தரவுகளும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் போன்றவை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினையில் எம்.ஜி.ஆர் பின்பற்றிய கொள்கை, இவ்விடயமாக ஜெயலலிதா கைக்கொண்ட கொள்கை, இவ்விடயமாக இருவருக்குமிடையிலான கொள்கை வேறுபாடுகள், அவை ஏற்படுத்திய தாக்கங்கள் போன்றவற்றினை வெளிக்கொண்டுவருவது ஆய்வினது நோக்கங்களாகக் காணப்படுகின்றன. முன்னைய ஆய்வுகள் என்று சொல்லுமளவிற்கு இவ்விடயமாக எவ்விதமான ஆய்வுகளும் நேரடியாக மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் ஒரு சிலர் அண்மைக்காலங்களில் வெளிவந்த உள்ளூர் பத்திரிகைகள் சிலவற்றில் மேற்குறித்த விடயமாகச் சில கட்டுரைகளை ஆய்வாளர்கள் சிலர் எழுதியிருந்தமை குறிப்பித்தக்கது. எது எவ்வாறாயினும், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இருவரும் எடுத்த நடவடிக்கைகள் இலங்கைத் தமிழ் மக்களிடையிலே செல்வாக்கினைப் பெற்றிருந்தாலும்கூட எம்.ஜி.ஆர் இவ்விடயமாக மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இலங்கைத் தமிழரிடையே பெற்ற மதிப்பினை ஜெயலலிதாவினால் பெற முடியவில்லை என்பதே உண்மை.

**பிரதான சொற்கள்:** இனப்பிரச்சினை, அனுதாப அலை, இராஜதந்திர நகர்வுகள், வெளிப்படையின்மை, சிவில் யுத்தம்

To whom correspondence should be addressed: arunn.msu@gmail.com

[72] Associate Professor, Department of History, University of Jaffna.

**அறிமுகம்**

நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக் கொண்ட இலங்கையின் இனப்பிரச்சினையினது உச்சவெளிப்பாடானது நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னராகவே வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது. பின்னாளில் இதன் பிரதிபலிப்புக்கள் இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் தெறிக்க ஆரம்பித்தமையின் பின்னணியிலேதான் இந்திய அரசானது மேற்குறித்த விடயமாக இலங்கையின் அரசியலில் தலையிட ஆரம்பித்தது. எடுத்துக்காட்டாக 1980களின் ஆரம்பத்திலிருந்து தமிழகத்திற்கு இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலிருந்து தமிழர்கள் அகதிகளாகப் பெருவாரியாக இடம்பெயர்ந்தமையினைக் குறிப்பிடலாம். அச்சமயத்தில் தமிழகத்தின் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் என்றழைக்கப்படுகின்ற எம்.ஜி.இராமச்சந்திரன் இவ்விடயமாக மத்திய அரசுடன் இணைந்து சில நடவடிக்கைகளினை மேற்கொண்டிருந்தார். அகதிகளை ஆதரித்தார். இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் சிலவற்றிலும் இறங்கியிருந்தார். ஆனால் இடையிலே அவர் மரணமடைந்தமையின் காரணமாக தொடர்ந்து சிலகால இடைவெளியில் தமிழக முதல்வரான ஜெயலலிதாவினது நடவடிக்கைகள் இலங்கையினது இனப்பிரச்சினை தொடர்பாக அவரது பதவிக்காலங்கள் நான்கிலும் ஒவ்வொரு தன்மைகள் கொண்டனவாகவே காணப்பட்டன. உண்மையில் தமிழகத்தினை நிர்வகித்த இருவரது பிறப்பும் தமிழகத்தில் நிகழவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. முன்னவர் இலங்கையினையும் பின்னர் கர்நாடகத்தினையும் பிறப்பிடமாகக்கொண்டவர்களென்பது தெரிந்ததே. இவர்கள் இருவரும் தமிழக மக்களால் நேசிக்கப்பட்டபோதும் கடல் எல்லையினையும் தாண்டி இலங்கைத் தமிழர் மனங்களில் இடம்பிடித்தவர் எம்.ஜி.ஆர் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

**இலங்கை இனப்பிரச்சினையின் ஆரம்பமும் இந்தியாவின் தலையீடும்**

1980களின் தொடக்கத்திலிருந்து உள்நாட்டுப்போர் சூடுபிடிக்க ஆரம்பித்தமையின் பின்னணியில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களில் சிலர் அகதிகளாகத் தமிழகம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இக்காலகட்டத்திலேதான் புலிகள் உள்ளிட்ட பல்வேறு போராட்டக் குழுக்கள் தமிழகத்தினைத் தளமாகக்கொண்டு பரவலாக இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (பாலசிங்கம்,அன்ரன்.2003) தொடர்ந்து 1983இல் இலங்கையில் நடைபெற்ற யூலைக் கலவரத்தின் பின்னராக இலங்கைத் தமிழருக்கும் அவர்களது போராட்ட நடவடிக்கைகளுக்கும் தமிழகத்தில் ஆதரவு பெருகியது. இப்பின்னணியிலேதான் தமிழகத்தினைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பலரும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவினை வழங்குவதன் ஊடாகத் தமிழக மக்களிடமிருந்து அனுதாபத்தினைப் பெற்றுத் தேர்தல் காலங்களில் அவர்களிடமிருந்து ஆதரவினைப் பெற ஆரம்பித்தனர். தொடர்ந்து இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாக இந்திய அரசும், தமிழக அரசும் தலையிடவேண்டிய நிலமை உண்டானது. இவ்விடயமாக இருநாட்டு அரசுகளும் மாறி மாறி ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்த ஆரம்பித்தன. குறிப்பாக. ஆயுதக்குழுக்களை இந்தியா பயிற்றுவிப்பதாக அதன்மீது இலங்கை அரசு குற்றஞ் சாட்டியது. எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழக முதல்வராக இருந்த காலத்தில் அவர் இலங்கைத்தமிழ் மக்களது அனுதாபியாக இருந்தமையின் பின்னணியில் தமிழகத்திற்கும் இலங்கை அரசுக்குமிடையில முறுகல்நிலை மேலும் அதிகரிக்க ஆரம்பித்தது.

எம்.ஜி.இராமச்சந்திரனது மறைவினைத் தொடர்ந்து சிலகாலத்தின் பின்னராகப் பதவியிலமர்ந்த அவரது கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினைப் பிரதிநிதித் துவப்படுத்திய (அ.தி.மு.க) ஜெயலலிதாவினுடைய நிர்வாகமானது எம்.ஜி.இராமச்சந்திரனுடைய கொள்கையினை அப்படியே கடைப்பிடித்து வந்தாலும்கூட இலங்கையினது இனப்பிரச்சினைப் பொறுத்தும், இலங்கைத்தமிழ் மக்கள் சார்புநிலை பொறுத்தும் அவரைப் போன்றதொரு நிலைப்பாட்டிலிருந்தாரா என்பது வினாவிற்குரியதே. அவர் முதலமைச்சராகத் தமிழகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்திய காலப்பகுதி முழுவதும் அவரது நடவடிக்கைகள் பெருமளவிற்கு இலங்கையினது இனப்பிரச்சினை தொடர்பாக இராஜதந்திரத்தின அடிப்படையிலேதான் அமைந்திருந்தன. அவ்வகையில் இவரது கொள்கை வெளிப்படையானதாக இலங்கையின் இனப்பிரச்சினை பொறுத்தும், இலங்கைத் தமிழர்கள் மீதான

அனுதாபம் பொறுத்தும் அமையவில்லை. இலங்கைத் தமிழ் மக்கள்மீது அனுதாபங்கொண்ட தமிழக மக்களையும், அங்கிருந்த சில அரசியல்வாதிகளையும் தேர்தல்களை இலக்கு வைத்துத் திருப்திப்படுத்துவாக இவருடைய செயற்பாடுகள் காணப்பட்டதென்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை. அதேநேரத்தில் இலங்கை அரசிற்கும் சில சந்தர்ப்பத்தில் மத்திய அரசிற்கும் இவருடைய இறுதிக்காலப் பேச்சுக்களும் இலங்கைத் தமிழர் சார்பாக இவரால் வெளியிடப்பட்ட தீர்மானங்களும், அறிக்கைகளும் தலையிடியினைக் கொடுத்ததென்பதனையும் மறக்க முடியாது. இலங்கையின் பெரும்பான்மையின இனவாத அரசியல் தலைவர்கள் சிலரும் இவரை எம்.ஜி.ஆரைப் போன்று தமது தேசத்தினது எதிரியாகவே இறுதிவரை பார்த்தனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

**இலங்கையின் இனப்பிரச்சினையும் எம்.ஜி.ஆருடைய காலமும் (1977 - 1987)**

தமிழக முதல்வர்கள் வரிசையில் எம்.ஜி.இராமச்சந்திரனது பெயரினை நவீன இலங்கைத்தமிழரது வரலாற்றினை எழுதுகின்ற எவரும் தவிர்த்துச் செல்ல முடியாது. அவ்வகையில் இலங்கைத்தமிழரது இனப்பிரச்சினை வரலாற்றில் மறக்கமுடியாத பெயர்களிலொன்றுதான் எம்.ஜி.இராமச்சந்திரனது பெயராகும். இதற்கு அவருக்கும் இலங்கைக்கும் இடையிலே இருந்த இரத்த உறவு மட்டுமன்றி அவர் உண்மையான இலங்கைத்தமிழ் மக்களது அனுதாபியாகவும் இருந்ததே. இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரம் பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் அவர் தமிழக முதலமைச்சராக இருந்தவர். தனிநாட்டுக் கோரிக்கையினை முன்வைத்துப் போராடிய போராளிக் குழுக்கள் அனைத்தும் ஒன்றுபட வேண்டுமென விரும்பியவர். மக்கள் தொண்டனாக வாழ்ந்த இவரைப் போன்று பொது வாழ்க்கையிலும் சரி அரசியலிலும் சரி நேர்மையாக வாழ்ந்தவர்கள் மிகவும் குறைவே. (தினமலர்.2009டிசம்பர்17) உயிருடன் இருந்த காலத்தில் தன்னால் இயன்றளவு உதவியினை மத்திய அரசின் ஊடாகவும் தன்னுடைய அரசின் மூலமாகவும் தனிப்பட்ட ரீதியலும் இலங்கைத் தமிழருக்காகச் செய்து வந்தவர். இறக்கும் தறுவாயிலும் அவர் இலங்கைத் தமிழரது அனுதாபியாகவே இருந்தவர்.

இலங்கையில் நிலவிவருகின்ற இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியாவிற்குள்ளேயே இரு வேறான நிலைப்பாடுகள் தற்போதும் இருந்துவருகின்றன. அதாவது மத்திய அரசினது நிலைப்பாடு ஒருவித மாகவும் தமிழ் மாநில அரசினது நிலைப்பாடு இவ்விடயமாகப் பிறிதொரு விதமாகவும் காணப்பட்டிருந்தது. அதேநேரத்தில் மத்திய அரசிற்கு ஆதரவான அரசு தமிழ்நாட்டில் ஆட்சி புரிகின்ற சமயங்களில் இரு அரசுகளும் இவ்விடயமாக ஒத்துப்போகின்ற தன்மையுடன் காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒத்துபோன சந்தர்ப்பங்கள் சிலவற்றில் தமிழக ஆட்சியாளர்கள் தமது ஆட்சி அதிகாரத்தினைக் குறிவைத்து இலங்கைத்தமிழர் நிலைப்பாட்டினைக் கணக்கிலெடுக்கப்படாத சந்தர்ப்பங்களும்கூட ஏற்பட்டிருக்கின்றன.

ஆனால் எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரை இதற்கெல்லாம் அப்பாற்பட்டவராகத் திகழ்ந்தார். 1980களிலிருந்து இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகவும் இலங்கையில் நடைபெற்ற தமிழரது போராட்டத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தன்னுடைய ஆதரவினைத் தெரிவிரித்து வந்தவர். மத்திய அரசினது எதிர்ப்பினையும் புறக்கணித்து போராளிகளுக்கு உதவியிருந்தார். அவர் மரணிக்கின்றவரை இது தொடர்ந்தது. (தேவானந்த்,தே.2016). இலங்கையில் நடைபெற்ற போராட்ட த்திற்கு ஆதரவாகத் தனது சொந்தப்பணத்திலிருந்து ஒரு குறிக்கப்பட்ட தொகையினையும் அவர் வழங்கியிருந்தார். அவ்வப்போது மத்திய அரசினால் போராட்டக்காரர்களுக்கு உருவான பிரச்சினைகளை அதனது எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது சமாளித்தவர். இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இந்தியாவினது கேந்திர - புவியியல் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டதென்பதனை ஏற்றவர். (பாலசிங்ம்,அன்ரன்.2003) எல்லாவற்றுக்கும் மேலாக தனிநாடு அமைவதற்கு அவர் ஆதரவாக இருந்தமை பற்றிய செய்திகளும் உள்ளன.

எம்.ஜி.ஆர் தன்னுடைய காலத்தில் இலங்கைத் தமிழரது பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளைத் துணிந்து எடுத்ததுடன் அதனை நடைமுறைப்படுத்தவும் மத்திய அரசுடன் இணைந்து

பணியாற்றியவர். இலங்கையில் தமிழர்களின் நலன்கள் காக்கப்பட இந்திய முயற்சி எடுக்கவேண்டுமெனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததுடன் அதன் பொருட்டு மத்திய அரசானது தீர்விற்கான திட்டங்களை முன்வைத்த சமயங்களிலெல்லாம் அது தொடர்பாக அச்சமயத்தில் தமிழ்நாட்டில் இருந்த அரசியல்வாதிகள் மற்றும் இலங்கைப் போராளிக்குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவற்றினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தவர். அரசியல் செய்கின்றபோது அதனால் ஏற்படுகின்ற விளைவானது இனப்பிரச்சினைக்கு சரியான முடிவுகளை முன்வைப்பதாக அமைய வேண்டுமென்பதில் அக்கறையாக இருந்தவர். (அருந்தவராஜா,க.2016) இவரதும் தமிழக பிற அரசியல் கட்சிகள் மற்றும் மக்களது அழுத்தங்களின் பின்னணியிலேதான் 1985இல் இலங்கை அரசிற்கும் இலங்கைத் தமிழ்ப் போராட்டக்குழுக்களுக்கும் இடையிலே அமைதி உடன்பாட்டிற்கான முயற்சியொன்றும் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து திம்புவில் இந்தியா, இலங்கை மற்றும் அச்சமயத்திலிருந்த சில போராளிக்குழுக்களுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆரினது இறப்பின் பின்னதாக இலங்கைத் தமிழரது அனுதாபியாகத் தன்னை மாற்றியவர் தமிழக முதல்வர் கருணாநிதி.

**இலங்கையின் இனப்பிரச்சினையும் ஜெயலலிதாவினது காலமும் (2009வரை)**

தமிழகத்தில் எம்.ஜி.ஆருக்குப் பின்னதாகத் தொடர்ச்சியாக இரு தடவைகள் பதவியிலமர்ந்தவரென்ற சிறப்பினைப் பெற்றவர் ஜெயலலிதா. அவ்வகையில் தமிழக மக்கள் எம்.ஜி.ஆருடைய மறுவடிவமாகவே ஜெயலிதாவினைப் பார்த்தனர். “அம்மா“ எனவும் “புரட்சித் தலைவி“ யாகவும் இன்றும் அவரைப் போற்றுகின்றனர். இத்தகைய செல்வாக்கினயும் மரியாதையினையும் தமிழக மக்களிடமிருந்து பெற்றுள்ள ஜெயலலிதா அத்தகைய மக்கள் நேசிக்கின்ற இலங்கைத்தமிழ் மக்களின் பொருட்டும், இங்கு நடைபெற்றுவந்த போராட்டம் குறித்தும் எம்.ஜி.ஆடைய கொள்கையினை அப்படியே பின்பற்றி வந்தாரா என்பது சந்தேகமே. இவ்விடயமாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாமே தமிழக மற்றும் இலங்கைவாழ் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவில்லையென்றே கூறலாம். அப்படி அவர் அனுதாப அலை காரணமாகச் செய்திருந்தாலும்கூட அவை பெருமளவிற்கு ஏதோ ஒரு வகையில் உள்நோக்கம் கருதியதாகவே அமைந்திருந்தன.

ஜெயலலிதாவினப் பொறுத்தவரை அவரது அரம்பகால அரசியல் செயற்பாடுகளில் இலங்கைத் தமிழரது பிரச்சினையென்பது பிரதான இடத்தினைப் பெற்றிருக்கவில்லை. எம்.ஜி.ஆர் உயிருடன் இருந்த கடைசிக் காலப்பகுதியில் இவர் அவரால் பல்வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டவர். பிரச்சார மேடைகளில் முழங்கியவர். அத்தருணங்கள் ஒன்றில்கூட இவர் இலங்கைத் தமிழருக்கு அனுதாபமாக நடந்துகொண்டதாகத் தகவல்கள் இல்லை. அப்படி இலங்கைத்தமிழரது அனுதாபியாக இருந்திருந்தால் எம்.ஜி.ஆரது நல்லெண்ணத்தினைப் பெறும் வகையில் அவர் உயிருடன் இருந்த சமயங்களில் ஏதாவதொன்றினை இலங்கைத் தமிழ்மக்களுக்காகச் செய்திருக்கலாம்.

எம்.ஜி.ஆர் மறைந்த சமயத்தில் கட்சிக்குள் தலைமை தாங்குவது தொடர்பான குழப்பங்கள் ஏற்பட்டன. அச்சமயத்தில் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அப்பதவிக்கு அ.தி.மு.கவின் மூத்த கட்சி உறுப்பினர்களினால் நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட சில தினங்களில் அவரது அரசு கலைக்கப்பட்டது. தொடர்ந்து தேர்தலின் மூலமாகக் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) தமிழகத்தின் ஆட்சியினைக் கைப்பற்றியது. கருணாநிதியினுடைய காலத்தில் இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் அரங்கேறிக்கொண்டிருந்தன. அதேநேரத்தில் தமிழ் போராளிக் குழுக்களின் நடமாட்டங்களும் தமிழகத்தில் அதிகரித்திருந்தன. எம்.ஜி.ஆர் எவ்வாறு இலங்கைத் தமிழ் மக்களுக்கும் போராளிக் குழுக்களுக்கும் ஆதரவாகச் செயற்பட்டு தமிழக மக்களது ஆதரவினைப் பெற்றிருந்தாரோ ஏறத்தாள அதேமாதிரியான நிலைப்பாட்டினையே கருணாநிதியும் அக்காலப்பகுதியில் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ஏற்பட்ட இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தியின் படுகொலையும்கூட இக்காலப்பகுதியில் உலகத்தினையே அதிரவைத்தது.

மேற்கூறப்பட்ட காரணங்களையும் பிற சில காரணங்களையும் முன்வைத்துத் தமிழகத்தில் ஆட்சி ஒழுங்குமுறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லையெனக் காரணங்காட்டி கருணாநிதியின் அரசு கலைக்கப்பட்டு தொடர்ந்து 1991 இல் நடைபெற்ற தேர்தலில் ஜெயலலிதா முதன் முறையாகத் தமிழகத்தின் முதல்வராகத் தெரிவானார். இத்தேர்தலில் வெற்றி பெறுவதன் பொருட்டு அவர் கையாண்ட பிரதான பிரச்சார அம்சமே "தமிழ்ப் போராளிக் குழுக்களின் மீதான எதிர்ப்பு" என்பதாக அமைந்தது. அதிலும் குறிப்பாக புலி எதிர்ப்பு என்பது குறிப்பிடத்தக்கது. கருணாநிதி காலத்தில் அவரால் இவர்கள் வளர்க்கப்பட்டதாகவும் தான் பதவிக்கு வந்தால் இவர்களை முற்றாகத் தமிழகத்தினை விட்டு அகற்றப் போவதாகவும் தெரிவித்தே தமிழக மக்களிடம் கணிசமான அளவு வாக்கினைப் பெற்றிருந்தார். இது எம்.ஜி.ஆர் கொண்டிருந்த இலங்கைத்தமிழர்கள் மற்றும் போராட்டக் குழுக்கள் மீதான கொள்கைக்கு முற்றிலும் முரணாக அமைந்தது. அப்படியிருக்க எப்படி இவ்விடயமாக இவரை அவரது வாரிசாகக் கருதலாம் என்ற வினாவும் உள்ளது. எம்.ஜி.ஆருடைய காலத்தில் மத்திய அரசிடமிருந்து வந்த பல நெருக்கடிகளை இலங்கைத் தமிழருக்காக அவற்றினைச் சமாளித்தவரென்பதனை வரலாறு சொல்லும். (பாலசிங்கம்,அன்ரன்.2003)

இத்தகைய பிரச்சாரத்தில் ஈடுபட்டு வெற்றியினைப் பெற்றதுடன் தான் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளிலும் ஜெயலலிதா இறங்கினார். அன்று அப்படிச் செய்தவர் இன்று எப்படி இலங்கைத் தமிழருக்காக மனம் மாறினாரென்பதும் ஆராயற்பாலது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவென்றால் அவர்களுக்காகப் போராடியவர்களை ஏன் இவர் வெறுக்க வேண்டும் இலங்கைத் தமிழருக்காக நன்மை பயக்கின்ற எந்தவொரு செயற்பாடுகளிலும் அச்சமயத்தில் ஈடுபடாத இவர் 1991 தேர்தலில் கருணாநிதியினை அகற்றுவதனையே பிரதான இலக்காகக் கொண்டிருந்தார்.

ரஜீவ்காந்தியின் மரணத்தின் பின்னரான ஜெயலலிதாவினுடைய முதலாவது காலப்பகுதியில் (1991-96) தமிழகத்தில் இலங்கைத் தமிழருக்கும் அவர்களுக்கு ஆதரவாக நிற்போருக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக இவர் ராஜீவ்காந்தி இறந்த தருணத்தில் இலங்கைத் தமிழர்கள் எல்லோரையும் இந்தியாவிலிருந்து அகற்றுவதற்கான தீவிர முயற்சியில் இறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக மாநாடுகள் மற்றும் கூட்டங்கள் நடாத்தினால் சம்மந்தப்பட்டவர்கள்மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறினார். தொடர்ந்து தமிழகத்தினைச் சேர்ந்த பல ஈழப்பற்றாளர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டனர். புலிகளது ஆயுதக் கலாசாரத்தினால் தமிழ்நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொது ஒழுங்கு இதனால் பாதிக்கப்படுவதாகவும் கருணாநிதியினது ஆட்சிக்காலம் முழுவதும் இவர் அறிக்கைகளை வெளியிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. வை.கோபால்சாமி. பழ.நெடுமாறன் போன்றவர்கள்மீது "பொடா சட்டம்" பாய்ந்தது.

இலங்கையிலிருந்து செல்கின்ற அகதிகள்மீது நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்டன. சாதாரண தமிழ் மக்கள் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு செல்லுவதற்கான விசா பெறுவதிலும் கட்டுப்பாடுகள் பல காணப்பட்டன. இலங்கைத் தமிழர்களது பிள்ளைகளுக்காகத் தொழிற்கல்லூரிகளில் இருந்தவந்த இடஒதுக்கீட்டினை அகற்றினார். இவர்களது குழந்தைகள் கல்லூரிகள், பள்ளிகளில் சேர்வதனைத் தடைசெய்தார். (உதயன்,2016டிசம்பர்11) உண்மையில் புலிகள் இயக்கத்தலைவர்தான் அவரது இலக்கு என்றால் எதற்காக அச்சமயத்தில் தமிழகத்தில் தங்கியிருந்த அப்பாவித் இலங்கைத் தமிழ் மக்கள்மீதும் ஈழஆதரவாளர்கள்மீதும் மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டாரென்பது வினாவிற்குரியதே. அப்படியானால் இதன் மூலமாக மத்திய அரசினைத் திருப்திப்படுத்தவா என்ற கேள்விக்கும் இடமுள்ளது.

ஒரு கட்டத்தில் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் எனவும் அவர்களால் தனது உயிருக்கு ஆபத்து என்றும் கூறியவர். தொடர்ந்து இவ்விடயமாக மத்திய அரசினையும் வலியுறுத்தி வந்தவர். புலிகளுக்குத் தடையும் விதிக்கப்பட்டது. 2002இல் சட்டசபையில் இவரால் இயற்றிய தீர்மானமொன்று

புலிகள் இயக்கத் தலைவர் கைது செய்யப்பட்டு அவர் இந்தியா அழைத்துவரப்பட வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கை அரசினால் புலிகளின் இயக்கத்தலைவரை பிடித்து நாடு கடத்த முடியாதுவிட்டால் இந்திய இராணுவத்தினை உதவிக்கு அனுப்பி அவரைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மத்திய அரசினை இந்தச் சட்டமன்றம் கேட்டுக்கொள்ளவததாகவும் தீர்மானத்தினை இயற்றினார். ஏற்கனவே இந்திய இராணுவம் இலங்கை சென்றதனை மறைமுகமாக எதிர்த்தவர் எம்.ஜி.ஆரென்பது இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.

அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இலங்கைத்தமிழர் சார்பான போராட்டங்களில் ஈடுபட்ட ப.நெடுமாறன், வை.கோபால்சாமி, பண்டிருட்டி இராமச்சந்திரன், ராமதாஸ், புலமைப்பித்தன் போன்ற பலரைக் கைது செய்து சிறையிலடைத்தார். இறுதிப்போர் நடைபெற்ற சமயத்தில் போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள், தமிழர்களைக் கொலை செய்ய வேண்டுமென்று இலங்கை இராணுவம் ஒருபோதும் எண்ணவில்லை. ஒரு யுத்தம் அல்லது போர் நடக்கின்ற சமயத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சாதாரணம்தான் என்ற கருத்தினை 17.01.2009இல் தனது அறிக்கையின் ஊடாகக் கூறிய இவர் 2011 தேர்தலின் பொருட்டுத் தனது கொள்கையினை அப்படியே மாற்றி அதனை இலங்கைத் தமிழ்மக்கள் சார்பானதாகவும் தனிநாட்டுக் கோரிக்கையாகவும் அமைத்தார். இவரது இத்தகைய நடவடிக்கையானது அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரண மக்கள் வரை ஆச்சரியப்பட வைத்தது. எம்.ஜி.ஆரிலும் ஒரு படி இவரை உயர்த்திக் காட்டியது.

ஜெயலலிதாவின் காலப்பகுதிக்குரிய தமிழ்நாட்டுச் சட்டபேரவையில் இரு தீர்மானங்கள் இயற்றப்பட்டதாக விமர்சகர் யதீந்தரா கூறுகின்றார். ஒன்று 2002இல் அவரால் இயற்றப்பட்ட தீர்மானத்தில் புலிகளின் இயக்கத் தலைவரைத் தூக்கிலிட வேண்டும் என்ற பிரேரணையும் மற்றையது தனிநாட்டுக்காகப் போராடிய அவரது கொள்கையான தனிநாட்டுக் கொள்கைக்கு பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற ஜெயலலிதாவினுடைய மற்றொரு தீர்மானமும் ஆகும். (யதீந்திரா.தினக்குரல்2016டிசம்பர்10) இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானது.

இவரை எம்.ஜி.இராமச்சந்திரனது இடத்தில் வைத்து இலங்கைத் தமிழ் மக்களது அனுதாபியாக எவ்வாறு நாம் அடையாளங் காணமுடியும். எம்.ஜி.ஆர் எந்தவொரு கட்டத்திலும் இலங்கைத் தமிழருக்காக சந்தர்ப்பவாத அரசியலைச் செய்யவில்லை. ஜெயலலிதாவினைப் பொறுத்தவரை ரஜீவ்காந்தியின் மரணத்தின் பின்னராகவே போராளிக்குழுக்களின் மீது இத்தகைய எண்ணத்தினை அவர் கொண்டிருந்தாரென்றும் கூறமுடியாது. அப்படியானால் எம்.ஜி.ஆரினது இறப்பிற்கு முன்னரான காலப்பகுதியில் போராளிக்குழுக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் ஆதரவான எந்தச் செயற்பாடுகளிலும் இவர் ஈடுபடவில்லையே. கருணாநிதியினை வீழ்த்துவதற்கு இவர் கையாண்ட ஒரு வழியே புலி எதிர்ப்புப் பிரச்சாரமாகும். எம்.ஜி.ஆருடைய மரணத்தின் பின்னராக கருணாநிதியினது காலத்தில் ஓரளவிற்கு மிதமான போக்கினையே அவர் இலங்கைத் தமிழர் விடயமாகக் கடைப்பிடித்து வருபவரென்ற எண்ணமும் ஜெயலலிதாவைப் பொறுத்து இவிடயமாக ஈழ எதிர்ப்பாளர் என்ற எண்ணமுமே இலங்கைத் தமிழ் மக்களிடம் இருந்தவந்தமை குறிப்பிடத்தக்கது.

1995இல் தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு சென்னை விமானநிலையத்தில் வந்திறங்கிய பேராசிரியர்களான வேலுப்பிள்ளை, சிவத்தம்பி, சண்முகதாஸ் உள்ளிட்ட பல இலங்கையினைச் சேர்ந்த தமிழ்துறை சார்ந்தவர்கள் அங்கு வைத்து ஜெயலலிதாவினது அரசினால் திருப்பி அனுப்பப்பட்ட நிகழ்வானது தமிழகத்தின்மீது உலகத் தமிழர்கள் அனைவரையும் ஆத்திரங்கொள்ள வைத்தது. அச்சமயத்தில் தமிழக அரசினது இத்தகைய நடவடிக்கைக்குத் தமிழ்நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சறுத்தல் ஏற்படலாம் என்று காரணங் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**இலங்கையின் இனப்பிரச்சினையும் ஜெயலலிதாவினது காலமும் (2009பின்பாக)**

வன்னி நிலப்பரப்பில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பொருட்டுக் குரல் கொடுப்பதன் மூலமாகத் தனது இலங்கைத் மக்களது மீதான அனுதாபத்தினை 2009 இன் ஆரம்பகாலங்களிலிருந்து படிப்படியாக ஆரம்பித்தார். இக்காலப்பகுதியில் இவரது நடவடிக்கைகள் யாவும் தமிழ் ஊடகங்களினால் பாராட்டப்பட்டன. தன்னை ஈழ விடுதலை ஆதரவாளராகவும் இனங்காட்டினார். 2011இல் நடைபெற்ற தேர்தலுக்கான பிரச்சாரங்களிலீடுபட்ட சமயங்களிலெல்லாம் இலங்கைத் தமிழருக்கு தி.மு.க துரோகம் செய்ததாகக் கூறிவந்தார். இறுதி யுத்த காலத்தில் காங்கிரசுடன் சேர்ந்திருந்த தி.மு.க போரை நிறுத்துவதற்கான அழுத்தத்தினை மத்திய அரசிற்கு வழங்கவில்லை. தான் பலமுறை வற்புறுத்தியும் அதற்கு தி.மு.க செவி சாய்க்கவில்லை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார் தேர்தல் காலங்களில் ஜெயலலிதா இலங்கைத் தமிழரை முன்வைத்துச் செய்த பிரச்சாரம் அவருக்குப் பெரு வெற்றியினைக் கொடுத்திருந்தது. (அருந்தவராஜா,2016)

ஜெயலலிதா இந்திய இராணுவத்தினை இலங்கைக்கு அனுப்பி இன்னல் பட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்களைக் காப்பாற்றப் போவதாக 2011 தேர்தலை குறிவைத்துப் பிரச்சாரங்ளை மேற்கொண்டு வந்தார். (நேரடி அவதானிப்பு அருந்தவராஜா,க. 2011) இத்தகைய இவரது ஆவேசமான உணர்ச்சி வசப்பட்ட பேச்சினால் கணிசமான அளவு  தமிழக மக்களிடமிருந்த வாக்கினையும் இத்தேர்தலில் பெற்றவர். அவ்வாறே 2016இல் தான் பதவிக்கு வருகின்ற சமயத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இரட்டை குடியுரிமை  வழங்குவதற்கான முயற்சியில் இறங்கப் போவதாகவும் குறிப்பிட்டவர். வெற்றி பெற்றவர் அவர் உயிருடன் இருந்த காலப்பகுதியில்  மத்திய அரசுடன் வெறுமனே கடித அரசியலை இவ்விடயமாக நடத்தினாரே தவிர உறுதியான முடிவு எதனையும் இவ்விடயமாக எடுக்கவில்லை. அத்துடன் 1983இன் பின்னராகத் தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்று நீண்டகாலமாகத் தமிழகத்தில் தங்கியிருக்கின்ற அகதிகளுக்கு நிரந்தரமான குடியுரிமையினை வழங்க வேண்டுமெனவும் மத்திய அரசாங்கத்தினை வலியுறுத்தப் போவதாகத் தெரிவித்திருந்தார். எந்தளவிற்கு ஜெயலலிதா கொழும்புடன் முரண்பட்டாரோ அந்தளவிற்கு அவர் தமிழகத்திலும் தமிழ் தேசிய சக்திகளினாலும் ஈழ ஆதரவாளர்களினாலும் பாராட்டப்பட்டார். இவரது செயற்பாடுகள் பின்னாளில் தமிழ்நாட்டுக்கு உரிய "அம்மா" என்ற அடையாளம் இலங்கைத் தமிழரிடமும் பிரபலமடைய வேண்டுமென்ற அடிப்படையில் காணப்பட்டது. இவையெல்லாம் கருணாநிதியனைத் தமிழினத் துரோகி என அடையாளப்படுத்தவதனை இலக்காகக் கொண்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள், மனிதாபிமானச் சட்டத்தினை மீறியமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் சம்மந்தமாக ஐக்கிய நாடுகள் சபையினது தீர்மானத்திற்கு இந்தியா அனுசரணை வழங்க வேண்டுமெனக் குரல் கொடுத்தார். அமெரிக்கா அரசாங்மானது ஜெனீவாவில் கொண்டுவந்த தீர்மானத்தினை இந்தியா ஆதரிக்க வேண்டுமென டெல்கிக்கு அழுத்தங் கொடுத்தார். இந்திய நாடாளுமன்றக் குழுவினது இலங்கை விஜயத்தினை ஜெயலலிதா பகிஷ்கரித்தார். அதுமட்டுமன்றி ஜெயலலிதா இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்கள் முழு இறையாண்மையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மத்திய அரசினை இடையிடையே கோரியும் வந்தவர். பொதுவாகவே இலங்கைத் தமிழர் பிரச்சினையென்பது தமிழகத்தின் இரு பெரும் கட்சிகளதும் அரசியல் காய் நகர்த்தலுக்கான விடயமாக 1980களின் பின்னராக இருந்து வருகின்றமையினை அவதானிக்கலாம். (தனபாலசிங்கம்,வீ.2016டிசம்பர்11)

தமிழகச் சட்டமன்றத்தினைக் கூட்டிய இவர் இலங்கை அரசிற்கு எதிராகப் பொருளாதாரத் தடையினை விதிக்க வேண்டுமெனக் கோரினார். 2013இல் சட்டமன்றத்தினைக் கூட்டிய இவர் தனிஈழத்திற்கான கருத்துக் கணிப்பு வேண்டுமென்ற தீர்மானத்தினையும் எடுத்தார். மேலும் 2013இல் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்ளக் கூடாதென எதிர்ப்பினை வெளிப்படுத்தியதன் பின்னணியிலேதான் இறுதி நேரத்தில் மன்மோகன்சிங்க் தனது கொழும்பிற்கான பயணத்தினைக் கைவிடவேண்டியதாயிற்று. 2015இல் இலங்கைமீதான ஐக்கிய நாடுகள் சபையினது மனித உரிமைகள்

குறித்த தீர்மானத்தினை நீக்குவதற்கு மேற்கொண்ட முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்ட சமயத்தில் அதற்கு எதிராக இந்தியா செயற்பட வேண்டுமென்ற தீர்மானத்தினை இயற்றி உலகத் தமிழரனைவரதும் கவனத்தினைத் தனது பக்கம் திருப்பினார். (தினக்குரல்,2016டிசம்பர்10)

ஒரு கட்டத்தில் ராஜீவ்காந்தியின் கொலையும் இவரால் கண்டிக்கப்பட்டதுடன் தொடர்புபட்ட வர்களுக்குத் தக்க தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் வெளிப்படையாகக் கூறிவந்த இவர் 2011இலிருந்து தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளது விடுதலைக்கு ஆதரவாகத் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார். மேலும் அவர் தான் கொலையுடன் தொடர்பானவர்களுக்குப் பொது மன்னிப்பினை வழங்குவதாகவும் கூறிவந்தார். அவர்களில் சிலரது உறவினர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். ஒரு கட்டத்தில் ரஜீவ்காந்தியின் கொலையுடன் தொடர்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனக் கூறியவர் பின்னாளில் அவர்களுக்கு மன்னிப்பினையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தவர்.

பொதுவாக 2016இல் நடைபெற்ற தமிழகச் சட்டசபைக்கான தேர்தலைப் பொறுத்தவரை இறுதிவரை கருணாநிதிக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகளவில் இருந்தன. தொடர்ச்சியாகத் தமிழகத்தில் இரு தடவைகள் எம்.ஜி.ஆருக்குப் பின்னதாக எவரும் முதலமைச்சர் பதவிக்கு வந்ததில்லை. இதனால் அதனை உடைக்கின்ற தேவை ஜெயலலிதாவிற்கு இருந்தது. ஊழல் வழக்குகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கும் தேர்தலில் வெற்றி பெறவேண்டிய தேவையும் அவருக்கு இருந்தது. இக்கால கட்டத்தில் இலங்கைத் தமிழரது பிரச்சினை முடிவிற்கு வந்தாலும் இலங்கைத் தமிழ் மக்களது நலன்களைக் கருத்தில் கொண்டு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுப்பதனை தமிழக மக்கள் விரும்பியிருந்தனர். எனவே தேர்தலை இலக்காகக் கொண்டு தமிழக மக்களது ஆதரவினைப் பெற சில தீர்மானங்களையும் அறிக்கைகளையும் விடவேண்டிய தேவை ஜெயலலிதாவிற்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் போர் நடைபெற்ற சமயத்தில் காங்கிரசுடன் கருணாநிதி இணைந்திருந்தமையினாலும் அச்சமயத்தில் அவர் அழிவுகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டினையும் முன்வைத்த ஜெயலலிதா செய்த பிரச்சாரம் அவருக்குச் சாதகமான வகையில் இத்தேர்தலில் அமைந்தது. (அருந்தவராஜா,க.2017)

1991இல் தமிழகத்தில் நடைபெற்ற சட்டசபைக்கான தேர்தலின்போது ஏற்கனவே குறிப்பிட்டதன் பிரகாரம் தேர்தலில் வெற்றியினைப் பெறுவதற்காக ஜெயலலிதா கையாண்ட தந்திரம் புலி எதிர்ப்புடன் இலங்கைத் தமிழ் மக்கள்மீதான கட்டுப்பாடுகளும் என்பதாக இருந்தது. அச்சமயத்தில் ரஜீவ்காந்தியினது இறப்புடன் தமிழக மக்களில் பலரும் அதனையே விரும்பியிருந்தனர். ஆனால் 2011, 2016களில் நடைபெற்ற தேர்தலில் புலி ஆதரவு மற்றும் இலங்கைத் தமிழ் மக்கள் அனுதாபம் என்பனவற்றினை முன்னிலைப்படுத்திப் பிரச்சாரங்கள் செய்து வந்தார். அச்சமயத்தில் தமிழகத்தில் இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவு பெருகியிருந்தமையே இதற்கான காரணமாகும். அவ்வகையில் நாடித்துடிப்பினை அறிந்து அரசியல் நடாத்தியவர் ஜெயலலிதா என்பது அவதானிக்கத்தக்கது.

ஜெயலலிதாவிற்கு கடைசி நேரத்தில் ஏற்பட்ட மனமாற்றத்தின் காரணமாக அவர் எடுத்த நடவடிக்கைகளும் தீர்மானங்களும் பாராட்டப்பட வேண்டியவை. அவை அவரது உள்நோக்கம் கருதியதாக இருந்தாலும்கூட தமிழ் இனத்திற்காகப் பேசுவதற்கு தமிழகத்தில் ஒரு தலைவி இருக்கின்றாரென்ற நம்பிக்கையினை எம்மவர் மத்தியில் ஏற்படச் செய்தது. பெரும்பான்மையின அரசியல்வாதிகள் பலரும் இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை அல்ல என அடித்துக்கூறும்போது அங்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் எனச் சட்டசபையில் உரையாற்றியவர். 2105யூன்14இல் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியினைச் சந்தித்து இலங்கை அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியவர். அவ்வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்கடியான சூழலில் தலையிடியினைக் கொடுத்த அரசியல் தலைவியாகவும் ஜெயலலிதா விளங்கியிருந்தார். அவரது மரணம் உறுதியாக நம்பலாம் இலங்கையினது பெரும்பான்மை இனவாதிகளுக்கு மகிழ்ச்சியினை ஏற்படுத்தியிருக்குமென்று.

எம்.ஜி.ஆரினைப் பொறுத்தவரை அவர் இனப்பிரச்சினை ஆரம்பித்த காலங்களில் முதல்வராகப் பணியாற்றியவர். இதனால் அவர் காலத்தில் இலங்கையில் பெரியளவில் அழிவுகள் ஏற்படவில்லை. அந்நேரத்திலேயே இலங்கைத் தமிழருக்காக உரக்கக் குரல் கொடுத்தவர். ஜெயலலிதாவினது காலத்தில் அழிவுகள் மோசமாக ஏற்பட்டன. ஆனால் மௌனியாக இருந்தார். மேலும் எம்.ஜி.ஆருக்கு தமிழக மக்கள் மத்தியில் அசைக்க முடியாத எப்போதும் செல்வாக்கு இருந்தது. அவர் ஊழல் வழக்குகளில் மாட்டிக்கொள்ளாதவர். அதனால் அவர் எதிர்கட்சியிருக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தார். அவர் முதல்வராக இருந்த காலம் முழுவதும் தி.மு.க தலைநிமிர முடியாமல் இருந்தது. அதானால் யாரையும் பொருட்படுத்தாமல் தான் நினைத்ததனை அப்படியே செய்தார். எவருக்கும் அஞ்சமாட்டார். ஆனால் ஜெயலலிதாவிற்கோ அவரது காலப்பகுதிகள் ஒவ்வொன்றிலும் தி.மு.க பலமான எதிர்கட்சியாகத் திகழ்ந்தது. எப்போதும் அவருக்குப் பிரச்சினையினை அரசியல் ரீதியில் கொடுத்துக் கொண்டிருந்தது. அதனால் அவர் தனது அரசியல் ஆதாயத்திற்காக எவற்றினையும் யோசித்தே செய்ய வேண்டியிருந்தது. மத்திய அரசினையும் சமாளிக்க வேண்டிய தேவை இருந்தது. அதுவும்கூட இத்தகைய அவரது இரட்டைநிலைப்பட்ட கொள்கைக்குக் காரணமாக இருந்திருக்கலாம். தேவையில்லாமல் பிரச்சினையில் அவர் மாட்டிக்கொள்ள விரும்பவில்லை.

பொதுவாக இலங்கையில் இடம்பெற்றுவந்த இனப்பிரச்சினையினை தமிழகத்தில் பொறுப்பிலிருந்த ஆட்சியாளர்கள் ஒவ்வொருவரும் தமது அரசியல் வெற்றிக்கான காய் நகர்த்தலுக்கான கருவியாகப் பயன்படுத்தியிருந்தனர். இதற்கு ஜெயலலிதாவும்கூட விதிவிலக்காக அமையவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர் எக்கணத்திலும் இலங்கையின் இனப்பிரச்சினையினை தனது அரசியலுக்காகப் பயன்படுத்தவில்லை. எனவே இவ்விடயமாக பல படிகள் ஜெயலலிதாவினைவிட உயர்ந்து நின்றார். இதனைவிட ஜெயலலிதா அரசியலுக்குள் நுழைவதற்குப் பலகாலத்திற்கு முன்னதாகவே அரசியலுக்கு வந்தவர் எம்.ஜி.ஆர். இதனால் அக்கால இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் அவருடன் இவ்விடயமாகத் தொடர்புகளை வைத்திருந்தனர். இப்பின்னணியில் இனப்பிரச்சினையின் ஆணிவேரினை அவர் நன்கு அறிந்தவராக இருந்தார்.

**முடிவுரை**

பொதுவாகவே இலங்கையில் இடம்பெற்றுவந்த இனப்பிரச்சினையில் தம்மை நேரடியாகத் தொடர்படுத்திய தமிழக அரசியல்வாதிகளில் அல்லது அதன் முதல்வர்களில் எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவிற்கும் தனியிடமுண்டு. இவர்கள் சர்வதேச அளவில் எமது பிரச்சினையினை உலகறியச் செய்தவர்களில் சிறப்பிடம் பெறுகின்றனர். ஆனால் கொள்கையளவில் எம்.ஜி.ஆர் இலங்கைத் தமிழர்மீது உண்மையான அனுதாபியாக இருந்தார். இறக்கும்வரை தான் கொண்டிருந்த இத்தகைய கொள்கையினால் மத்திய அரசுடன் முரண்பட வேண்டிய நிலையிலும் இருந்தார். இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான முயற்சிகளிலும் நேரடியாகவே இறங்கியிருந்தார். இலங்கையில் நடைபெற்றுவந்த போராட்டத்தினை ஆதரித்தமையினால் இலங்கை அரசினாலும் கண்டிக்கப்பட்டவர். ஆனால் ஜெயலலிதாவோ தனது பதவிக்காலத்தில் 2009இற்கு முன்னதாக ஒரு கொள்கையும் 2009இற்குப் பின்னதாக ஒரு கொள்கையும் இலங்கை இனப்பிரச்சினை பொறுத்துக் கொண்டிருந்தார். அதாவது முதலாவது கட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையினைக் கண்டுகொள்ளாதவராகவும் இரண்டாவது காலகட்டத்தில் அதுவே தமது மூச்சாகவும் செயற்பட்டார். அவ்வகையில் .லங்கையில் இடம்பெற்றவந்த இனப்பிரச்சினை பொறுத்து அவர் எச்சந்தர்ப்பத்திலும் உறுதியான கொள்கையில் இருக்கவில்லையென்பதனை அறியலாம். உண்மையில் ஜெயலலிதாவினது இடத்தில் எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் ஆரம்பத்திலேயே தீர்வொன்று ஏற்பட்டிருக்கும் என எண்ணலாம்.

**உசாத்துணை நூல்கள்**

**தமிழ்**

1. அருந்தவராஜா,க.(2017மே), ஜெயலலிதா (கலையிலிருந்து அரசியல்வரை), அஞ்சு வெளியீடு, நல்லூர்.
2. அறிவகராஜா,க., தமிழக அரசியலில் ஜெயலலிதா, மதுரை: பல்சமய ஆய்வாளர் மன்றம்.
3. அன்ரன் பாலசிங்கம். (2003), விடுதலை - கட்டுரைத் தொகுப்பு, பெயர்மக்ஸ் பதிப்பகம், இங்கிலாந்து.
4. முகம்மது சமீம். (1998), ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள், றிசானபப்ளிஸர்ஸ், கொழும்பு.
5. திருநாவுக்கரசு, மு. (1991மார்கழி), இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள், தமிழ்தாய் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

**English**

1. Goonewardena, Leslie.(1960, A Short History of the LSSP, Colombo.
2. Wilson,A.J. (1988), The Break - Up of Sri Lanka ; The Sinhalese - Tamil Conflict, University of Hawai Press, London.

.3. Vaasanthi, K. ( 2012). Jayalalithaa ; A Portyait, New Delhy : Penguin.**பத்திரிகைகள்**

1. தினத்தந்தி, சென்னை.
2. தினமணி, சென்னை.

3 தினமலர், சென்னை.

4. தினகரன், சென்னை.

5 வீரகேசரி, கொழும்பு.

6. தினக்குரல், கொழும்பு.
7. உதயன், யாழ்ப்பாணம்.
8. வலம்புரி, யாழ்ப்பாணம்.

**கருத்தரங்குகள்**

11.05.2016இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது வரலாற்றுத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "தமிழகச் சட்டமன்றத் தேர்தல் 2016" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் க.அருந்தவராஜாவின் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

17.012017இல் நடைபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினது கலை கலாசார பீடத்தினது ஐந்தாவது தேசிய கருத்தரங்கில் "தமிழக சட்டசபைத் தேர்தலும் (2016) திராவிட முன்னேற்றக் கழகத்தினது வீழ்ச்சியும்" என்ற தலைப்பில் க.அருந்தவராஜாவினால் வாசிக்கப்பட்ட கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்.

20.12.2016இல் நடைபெற்ற தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினது ஆறாவது சர்வதேச கருத்தரங்கில் "தமிழக அரசியலில் செல்வி ஜெ.ஜெயலலிதாவின்தனிப்பட்ட ஆளுமை" என்ற தலைப்பில் க.அருந்தவராஜாவினால் வாசிக்கப்பட்ட கட்டுரையிலிருந்து பெறப்பட்ட கருத்துக்கள்.

**இணையம்**

(https://en.wikipedia.org/wiki/**Jayalalitha**a)

www.bbc.com/news/world-asia-india-32857257